அனுப்புகின்ற ஏற்பாடுகளைச் செய்வதற்காக நமக்கு தாக்கீது அனுப்பியது. உடனடியாக இன்று காலையிலே கூட 3 காவல் துறை அதிகாரிகள் விமானம் மூலமாக பம்பாய்க்கு அனுப்பப் பட்டிருக்கிறார்கள். அவர்கள், தமிழ்நாட்டைச் சேர்ந்த அந்தப் பயணிகளை பம்பாயிலே விமான நிலையத்திலே சந்தித்து மத்திய அரசின் மூலமாகவும், மாநில அரசின் மூல மாகவும் தேவையான உதவிகளை அவர்களுக்குச் செய்வதற் காகவே இன்று பம்பாய்க்கு அனுப்பி வைக்கப்பட்டிருக் கிறார்கள். மேலும் இன்று இந்த அவையிலே இப்பொழுது எழுப்பப்பட்ட இந்த மிக முக்கியமான மனித நேயப் பிரச்சினை கள் அடிப்படையில் இன்றும் மத்திய அரசோடு தொடர்பு கொண்டு புதிய தகவல்கள் இருப்பின் நாளைய தினமும் இந்த அவையிலே அறிவிப்பேன் என்று உறுதி கூறுகிறேன்.

(எ) விசாக்கள் பெறுவதற்காக தமிழர்கள் சென்னையிலுள்ள அமெரிக்க தூதரகத்தின் முன்பு வெயிலில் காத்துக் கிடக்கும் அவலநிலை குறித்து.

* திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை இந்த மன்றத்தினுடைய மாண்புமிகு உறுப்பினர்கள் இன்றைய தினம் வெளிநாடுகளிலே இந்தியர்களுக்கு ஏற்படுகின்ற அவலங்களையும், துயரங்களையும் பற்றி நம்முடைய அரசினுடைய கவனத்தை ஈர்த்தார்கள். நான் இன்று தமிழகத்தினுடைய தலைநகரிலே, நமது சென்னையி லேயே, நாம் பிறந்த மண்ணில் நமது சுயமரியாதைக்கும், சுய கௌரவத்திற்கும் ஏற்பட்டிருக்கின்ற ஒரு பங்கத்தைக் குறித்து நமது அரசினுடைய, குறிப்பாக முதலமைச்சருடைய, கவனத்தை தங்கள் மூலமாக ஈர்க்க ஆசைப்படுகிறேன். தென் மாநிலங்களிலிருந்து அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு வேலை வாய்ப்பு, படிப்பு, சுற்றுலாவிற்கு, பணி தேடி, செல்கின்றவர் கள் இங்கே சென்னை அண்ணா சாலையிலே இருக்கின்ற கான்சு லேட் ஜெனரல் ஆபீசிலே விசா வாங்கிச் செல்ல வேண்டியிருக் கிறது. அந்த விசா வாங்கச் செல்லுகின்ற நமது மண்ணின் மைந்தர்களை, மௌண்ட் ரோடிலே நடுத்தெருவிலே நிறுத்தி வைத்து, வயோதிகர்கள், கர்ப்பிணிப் பெண்கள், இளம் பெண்கள், குழந்தைகள் இவர்களை எல்லாம் அந்த வெயிலில் நிற்கச் சொல்லுகின்ற கொடுமை அங்கே கண் எதிரே நடக்கிறது. ஆகவே, நான் அந்த அலுவலகத்தினுடைய நடைமுறையை மாற்றச் சொல்லவில்லை. நமது மண்ணிலேயே நமது இந்தி யனுக்கு ஒரு சுய கௌரவம் இருக்கவேண்டுமென்று எதிர்பார்க் கிறோம். எனவே, அந்த அலுவலகத்திற்குள்ளே ஒரு ஷெட் மாதிரி போட்டு அவர்களை அமர வைத்து சற்று மரியாதை யோடு விசா வழங்குகின்ற பார்மாலிட்டிசை நடத்தினால் நன்றாக இருக்கும். இது குறித்து தினமலர் பத்திரிகையில் கடந்த வாரம் ஒரு பெரிய செய்தி வெளிவந்திருக்கிறது.

1990 ஆகஸ்டு 22] [திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்]

எனவே நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அந்த வெளிநாட்டு தூதரக அலுவலகத்திற்கு நேரடியாகவோ அல்லது—how the protocol permits என்று எனக்குத் தெரியவில்லை—நமது வெளிநாட்டு அமைச்சரகத்தின் மூலமாகவோ தொடர்பு கொண்டு நமது சுய கௌரவத்திற்கு பங்கம் இல்லாத வகையில் அந்த அபிஷியல் பார்மாலிட்டிஸ் நடப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

10–35 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆல்போன்ஸ் அவர்கள் எடுத்துக்கூறிய இந்தக் கருத்து உண்மையானது. நானே கூட பத்திரிகைகளில் அந்தப் புகைப்படங்களைப் பார்த்து அதிர்ச்சியுற்றேன். விசா பெறுவதற்காக அமெரிக்க அலுவலகத்திற்கு முன்னால் க்யூ வரிசையில் கொளுத்தும் வெய்யிலில் ஏராளமான தமிழர்கள் அமர்ந்து இருக்கின்ற காட்சி மனதை உருக்குவதாகத்தான் இருக்கிறது. அவர்கள் குறிப்பிட்டதைப் போல் இங்கு நடைபெற்ற இந்த விவாதத்தை அடிப்படையாக வைத்து அந்த அலுவலகத்தார் அப்படி விசா பெற வருகிறவர்களுக்கு அங்கே நிழல் தருகின்ற நிலையிலே அந்த வளாகத்திற்குள்ளேயே சுவர் அடைப்புக்குள்ளாகவே இருக்கின்ற அந்த வளாகத்திற்குள்ளேயே தங்கி அந்த விசா பெறுவற்கு ஏற்ற வசதிகளைச் செய்து தருவார்கள் என்று நம்புகிறேன். அரசின் சார்பிலும் அவர்களுக்கு அறிவிக்கப்படும். சுயமரியாதை பற்றி திரு. ஆல்போன்ஸ் அவர்கள் சொன்னார்கள். அமெரிக்கர்களுக்குக் கூட ஒரு அலட்சியம். தமிழ் நாட்டிலே சில பேர் சுயமரியாதையைப் பற்றிக் கவலைப்படாமல் இருக்கிறார்களே என்ற காரணத்தால் அவர்கள்கூட நம்முடைய சுயமரியாதையை அலட்சியப்படுத்துகிறார்கள். சுயமரியாதை இங்கே பலருக்கு இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டி அரசு அமெரிக்க அலுவலகத்திற்கு எழுதும்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

சென்னை பெருங்களத்தூரிலுள்ள ''ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலை'' மூடப்பட்டுள்ளதால் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எஸ்.டி. உகம்சந்த், சோ. அழகர்சாமி, ஜி. பழனிச்சாமி, எஸ். திருநாவுக்கரசு, கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், ஆர். மூக்கன், வெ. இராசு, கொ. மாதப்பன், திருமதி ?. லட்சுமி மற்றும் திரு. உ.ரா. வரதராசன் ஆகியோர் ''சென்னை பெருங்களத்தூரிலுள்ள ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலை